Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 73/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சம்பத்குமார் |
| Father's Name | – | காளிமுத்து |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 03rd January 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது அங்கலக்குறிச்சியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எனது அம்மாவின் பெயர் பாக்கியம். அவர் சாலை விபத்தில் கார் மோதி இறந்துவிட்டார்.

கடந்த 01.01.2017 அன்று இரவு 6 மணிக்கு என் தாய் என்னுடைய வீட்டிற்கு அருகில் உள்ள ரோட்டை கடக்கும்போது இனோவா கார் மோதி இறந்துவிட்டார். எனக்கு விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்றும், இனோவா காரின் பதிவெண்ணும் ஓட்டுநரும் யார் என்று தெரியாது.

பின்னர் காயம்பட்ட எனது தாயாரை பொள்ளாச்சி அரசு மருததுவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். வரும் வழியில் எனது தாயார் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் தெரிவித்தனர். பின்னர் நான் மேற்கண்ட சாலை விபத்து குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்னர் அடுத்த நாள் எனது தாயாரின் பிரேத விசாரணையின்போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**அரசுதரப்பு சாட்சி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

சாலை விபத்தானது வால்பாறை to பொள்ளாச்சி மெயின்ரோட்டில் அங்கலக்குறிச்சி பழைய போஸ்ட் ஆபிஸ் அருகே உதயம் கார்டன் செல்லும் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான்.

மேற்கண்ட ரோட்டில் எதிரி பிரவீன்குமார் என்பவர் டொயோட்டா இனோவா கார் TN 30BZ 1001 என்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலையை கடக்க முயன்ற என் தாயார் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தினார் என்றால் நான் விபத்தினை நேரில் பார்க்கவில்லை.

ஆஜர் எதிரியை காப்பாற்ற வேண்டி சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்து

விபத்தினை பார்த்து விட்டு தற்போது விபத்தினை நேரில் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**Sd/. M.A.Suvedharanyan B.A.,B.L.,(Hons.)**

Judicial Magistrate No. II,
Pollachi.(FAC)